# நேர்முக பரீட்சை உரையாடல்

*«வெற்றிடமாக இருக்கும் ஒரு தொழிற்கல்வி பயிலும் இடத்திற்கு நான் 150 விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்வேன், 120 விண்ணப்பங்கள் வடிகட்டி வெளியேற்றப்படும், பின்பு 30 விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படும், இவ்வாறு தெரிவு இடம்பெறும். இறுதியில் ஒரு தொழிற்கல்வி இடத்திற்கு எனக்குச் சிறந்தாகத் தெரியும் 5 நபர்களைத் தெரிவேன். இவர்களை நான் நேர்முக உரையாடலுக்கு அழைப்பேன். வழமையாக 3 நபர்களைத் வேலை செய்து பார்க்க அழைத்து அதில் ஒருவரை நாம் தேர்ந்தெடுப்போம் .» **Daniel Fuchs**, வாகன நிலை அவதானிப்பாளர்.*

## நீங்கள் நேர்முக உரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? இதுவே ஒரு பெரிய வெற்றி!

எப்படியிருப்பினும் நீங்கள் வேறு பல விண்ணப்பதாரிகளிலும் முதன்மை பெற்றுள்ளீர்கள்: நீங்கள் சற்றுப் பதட்டம் அடைந்தாலும், இது தொழிற்கல்விக்கான இடத்தைக் கண்டடைவதற்கான முக்கிய அடியெடுப்பாகும்.

*«உங்களுக்குப் பதட்டம் இருப்பின், நீங்கள் இன்னும் பலவற்றை யோசிக்காதீர்கள். உங்களுக்கு என்னால் சாதிக்க முடியும் என்ற தன்நம்பிக்கை இருக்க வேண்டும்.» **Amanda***

இப்போது நீங்கள் உங்கள் நேர்முகக் கலந்துரையாடலை வெற்றிகரமாக நடத்த வேண்டும். ஒரு சிறந்த தயாரிப்பு தன்நம்பிக்கையை வளர்த்துவிடும். தொழில் கற்பிப்பவர்கள் உங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றார்கள்?

*«மிகத் தெளிவாக, முதல் கணிப்பு எனக்கு முக்கியமானது. ஒருவர் எப்படி வருகின்றார், அவர் எவ்வாறு உடுத்தியுள்ளார், அவர் எங்களுடன் வேலை செய்ய விரும்புகிறார் என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டும். அதன்பின் அவர் தயாரிப்புடன் வந்துள்ளாரா என நான் பார்க்க வேண்டும். ஒருவர் எம்மிடம் வந்து, அவருக்கு உள்ள திறமைகள் மற்றும் பலவீனங்கள் குறித்து அறியாதவராகவும், அரை மணித்தியாலத்திற்கு அது குறித்து யோசிப்பவராகவும் இருந்தால் அவர் குறித்து நல்ல அபிப்பிராயம் ஏற்படாது.» **Esther Schüpbach**, தொழில் கல்லூரி அதிபர்*

நீங்கள் எவ்வாறு நேர்முக உரையாடலுக்குச் செல்ல விரும்புகின்றீர்கள்? நீங்கள் என்ன கூறப்போகின்றீர்கள்? நீங்கள் எப்படிக் கூறப்போகின்றீர்கள்?

*«சிக்கலாக இருந்தாலும் அமைதியாக இருங்கள். அனைவருமே பதட்டமாகத்தான் இருப்பார்கள். உங்கள் திறமைகள் பலவீனங்களை நினைத்துக் கொள்ளுங்கள், அது எப்போதும் கூடவே வரும். நீங்கள் ஏன் இந்த வேலையை அல்லது இந்த நிறுவனத்தைத் தேர்ந்து கொண்டீர்கள், அது எப்போதும் போன்று வெளிவரும். கலந்துரையாடும் நபரை எப்போதும் கண்களால் பார்த்துக் கொள்ளுங்கள். » **Simone***

## நேர்முக உரையாடலை பழகிக்கொள்ளல்

### யாருடன் நீங்கள் நேர்முக உரையாடலை பழகிக்கொள்ள விரும்புகின்றீர்கள்?

அம்மாவுடன்? அப்பாவுடன்? ஒரு தெரிந்த ஆண் அல்லது பெண் நபருடன்? வயதுவந்த பெரியவர்கள் பலருக்கு நேர்முக உரையாடலில் என்ன நடக்கும் என்பது தெரிந்திருக்கும், இவர்களில் பலர் ஏற்கனவே முன்பு ஒருமுறை இதை அனுபவித்து இருப்பார்கள். இந்த அனுபவங்களால் நீங்கள் இலாபமடையலாம். அத்துடன் நீங்கள் சேர்ந்து பழகிக்கொள்ளும் தோழரும் இதற்கான தயாரிப்புச் செய்தல் வேண்டும். நீங்கள் அவர்களுக்குத் தேவைப்படும் படிவங்களைக் கொடுக்க வேண்டும்.

- விண்ணப்பப்படிவங்கள், நீங்கள் நிறுவனத்திற்கு அனுப்பியது
- தொழிலுக்கான மற்றும் நிறுவனத்திற்கான படிவங்கள்
- கேட்கக்கூடிய கேள்விகள் பற்றிய பிரதிகள்

*«உண்மையைக் கூறவேண்டும், இது முக்கியமானது. நீங்கள் வெட்கப்படக்கூடாது. நீங்கள் நேர்முகக் கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள், இதுவே ஒரு ரெரிய அடியெடுப்பாகும் .» **Céline***

### எவ்வாறு நீங்கள் நேர்முகக் கலந்துரையாடலுக்குப் பழகிக்கொள்ள விரும்புகிறீர்கள்?

- கலந்துரையாடல் நாளுக்கு இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாக நீங்கள் பழகிக்கொள்ளுங்கள்.
- நீங்கள் நேரம் எடுத்துக்கொள்ளுங்கள், சிலவேளைகளில் அனைத்தும் நிறைவேற ஒரு மணித்தியாலம் எடுக்கலாம்.
- உங்கள் கலந்துரையாடும் தோழரிடம் உங்களிடம் சிக்கலான கேள்விகளைக் கேட்குமாறு கேட்டுக்கொள்ளுங்கள்.
- பழகும் தோழரோடு நீங்கள் என்ன உடுத்த வேண்டும், எப்படிச் செல்லவேண்டும் என விவாதித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் பதட்டத்தை எவ்வாறு தணித்துக் கொள்ளலாம் என்பதற்கு உங்களோடு பழகும் நபரிடம் சில புத்திமதிகளைக் கேளுங்கள். நினைவிற் கொள்ளுங்கள், நேர்முகக் கலந்துரையாடலில் நீங்கள் சந்திக்கும் மனிதர், உங்களோடு கதைப்பதற்கும் உங்களை அறிந்து கொள்ளவும் விரும்புகிறார். நீங்கள் குழுவிற்கும் நிறுவனத்திற்கும் பொருத்தமானவரா என்பதை அறிந்து கொள்ள விரும்பும் ஒருவரை நீங்கள் சந்திக்கின்றீர்கள்.

*«ஒருவருக்கு சிறந்த சராசரிப் புள்ளிகள் உள்ளபடியால் சிறந்தவராக இருப்பதில்லை. சிறந்தவர் எப்போதும் சிறந்தவர் இல்லை, சிலவேளைகளில் சிறந்தவர் எனப்படுபவர் தன்னை செயற்படுத்துபவராகவும், நன்கு பலனளிப்பவராகவும், மகிழ்வைக் காண்பிப்பவராகவும், அவதானமாக இருப்பவராகவும், ஒரு குழுவாகச் சேர்ந்து செயற்படுபவராகவும் இருக்க வேண்டும். இந்தக் வேலைக்குழுவில் எங்களுக்கு ஒரு இடைவெளி இருக்கலாம் என்று, நாங்கள் எண்ணுகிறோம், அதை நிரப்புபவராகப் புதியவர் இருப்பார், எங்களிடம் இல்லாததை, நாங்கள் பெற விரும்புகிறோம். »* ***Daniel Fuchs,*** *வாகன பிழை கண்டுபிடிப்பாளர்*

## நேர்முக உரையாடலின்போது கேட்கப்படும் கேள்விகள்

சாதாரணமாக ஆம் அல்லது இல்லை என்று பதிலளிக்காதீர்கள். அவர்கள் நீங்கள் குழுவாக வேலைசெய்ய விருப்பமுள்ளவரா என அறிய விரும்பினால் உங்கள் வழமையான நாட்கள் குறித்து விளக்குங்கள், உதாரணமாக விளையாட்டு சங்கத்தில் குழுவாக இருப்பது, சாரணர் குழுவில் அல்லது நீலவட்டத்தில் குழுவாக செயற்படுவதைத் தெரிவியுங்கள். உங்கள் வாழ்க்கையின் உறுதியான அனுபவத்திலிருந்து உதாரணங்களை விளக்கினால், கலந்துரையாடும் நபர் உங்களை நன்கு கண்டறிந்து கொள்ள உதவும்.

### கலந்துரையாடல் ஆரம்பம் குறித்த கேள்விகள்

- நீங்கள் எவ்வாறு இந்தத் தொழிலுக்கு வந்தீர்கள்?
- நீங்கள் எவ்வாறு தொழில் தெரிவை மேற்கொண்டீர்கள்?
- நீங்கள் என்ன எல்லாம் செய்துகொண்டீர்கள்? இந்த தொழிலுக்கான வழி குறித்து விளக்குங்கள்.
- நீங்கள் இந்த வேலையை செய்து பார்த்தீர்களா?
- தகவல் நிகழ்வுகளுக்கு நீங்கள் சென்றீர்களா?
- உங்களுக்கு உதவிகள் உள்ளதா? உங்களுக்கு எவராவது உதவினார்களா?

### நிறுவனம் குறித்த கேள்விகள்

- ஏன் நீங்கள் எமது நிறுவனத்திற்கு வந்தீர்கள்?
- எமது நிறுவனம் என்ன செய்கின்றது
- ஏன் நீங்கள் எமது நிறுவனத்திற்குப் பொருத்தமாக உள்ளீர்கள்?
- நீங்கள் சுவிசில் வளரவில்லை: சுவிஸ் நிறுவனத்தில் அமுலில் இருக்கும் பழக்கவழக்கங்களை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

### தொழில் குறித்த கேள்விகள்

- நீங்கள் ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தீர்கள்?
- நீங்கள் உங்களுக்கு வேறு தொழிலையும் விரும்பினீர்களா?
- உங்களுக்கு ஏன் இந்த வேலை மற்றவைகளிலும் பார்க்க சிறந்த விருப்பமாக உள்ளது?
- நீங்கள் ஏன் இந்த வேலைக்கு உகந்தவராக உள்ளீர்கள்?
- நீங்கள் இப்போது தொழிலைக் கற்பவராக இருந்தால்: உங்களுக்கு எவை கிடைக்கும் என்பது தெரியுமா?
- நீங்கள் உங்களது கனவான தொழிற்கல்வி குறித்து விளக்க முடியுமா: எது எவ்வாறு உள்ளது?
- நீங்கள் துறைசார் தொழிற்கல்லூரிக்கு நன்கு தயார்படுத்தப்பட்டீர்களா?
- இந்தத் தொழிலுக்கு நீங்கள் உறுதியாக கலந்துரையாடுபவராக சரியாக கைவேலையில் சிறந்தவராக மொழியைப் பேசுவதில் சிறந்தவராக இருக்க வேண்டும். (தொழில் குறித்து தகவல் பிரதிரயைப் பாருங்கள்). நீங்கள் இந்தத் திறமைகளைக் கொண்டுள்ளீர்களா?

## உங்களைக் குறித்த கேள்விகள்

- உங்கள் சிறந்த நண்பி, உங்கள் சிறந்த நண்பர்: அவர்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?
- உங்களது என்ன திறமைகள் குறித்து நீங்கள் பெருமைப்படுகின்றீர்கள்?
- நீங்கள் எதைத் திறமையாகச் செய்வீர்கள்?
- எதில் நீங்கள் நம்பிக்கை வைத்துள்ளீர்கள்?
- நீங்கள் விழிப்பாயிருக்கும் ஒருவரா?
- உங்களிடம் இதுவரை எவை சிறப்பாக இல்லை என்று, நான் உங்கள் நண்பரிடம் கேட்டால்? அவர் என்ன கூறுவார்?
- எனக்கு நீங்கள் மூன்று உங்கள் பலவீனங்களைக் கூறுங்கள்.
- உங்கள் பலவீனங்களோடு நீங்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றீர்கள்? அதிலிருந்து எதைக் கற்றுக்கொள்கின்றீர்கள்?
- உங்கள் சான்றிதழ் குறித்து நீங்கள் என்ன கூறுகின்றீர்கள்? அதனுடன் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா?
- நீங்கள் தகமை அறிதல் பரீட்சையில் தோற்றினீர்கள்: அந்த முடிவுகளுடன் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா? எது கடினமாக இருந்தது? இது உங்களுக்கு இலகுவாக இருந்தது?
- நீங்கள் வேறு மொழிகள் பேசுவீர்களா?
- உங்கள் வகுப்பில் நீங்கள் என்னவிதமாக உள்ளீர்கள்?
- உங்களுக்கு விசேட திறமைகள் உள்ளதா? நீங்கள் எவ்வாறு திறமைகளைப் பெற்றீர்கள்?

## சூழமைவு குறித்த கேள்விகள்

- நீங்கள் எப்படி வாழ்கின்றீர்கள்? நீங்கள் யாருடன் வாழ்கின்றீர்கள்?
- உங்களுக்கு சகோதரர்கள் உள்ளார்களா? இளையவர்களா அல்லது மூத்தவர்களா? அவர்கள் என்ன செய்கின்றார்கள்? அவர்கள் ஒரு தொழிலைக் கற்றுள்ளார்களா?
- உங்கள் தாய் என்ன செய்கிறார்? உங்கள் தந்தை?
- உங்கள் வீட்டில் வீட்டு வேலைகளை யார் செய்கிறார்கள்?
- வீட்டு வேலைகளில் நீங்கள் உதவுகின்றீர்களா? வீட்டுவேலைகளில் நீங்கள் எதைத் திறமையாகச் செய்வீர்கள்?
- உங்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டால், யாருடன் முதலில் நீங்கள் கதைப்பீர்கள்?
- நீங்கள் ஒருகாலத்தில் ஒரு சொந்தக் குடும்பத்தை வைத்திருக்க விரும்புகிறீர்களா?
- நீங்கள் ஒரு தொழிலில் சிறந்தவராக பெயர்பெற வேண்டுமென கனவு காண்கின்றீர்களா? இது எவ்வாறு இருக்கப்போகின்றது?

## கலந்துரையாடல் நிறைவு

இறுதியில் நீங்கள் ஒரு கேள்வியைக் கேட்பது எப்போதும் சாதகமாக அமையும். நீங்கள் உங்களை நேர்முகக் கலந்துரையாடலுக்குத் தயார்படுத்தும்போதே, நீங்கள் எதைக் கேட்க விரும்புகிறீர்கள் என்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

- உங்களுக்கு நிறுவனம் குறித்து ஏதாவது கேள்விகள் உள்ளதா?
- இந்த நிறுவனத்தில் எதிர்காலத்தில் தொழில் கற்பதற்கு முன்பாக என்ன தகவல்கள் இன்னும் தெரியமால் உள்ளது என்பதைக் கலந்துரையாடலுக்கு முன்பாக யோசித்துக் கொள்ளுங்கள், இந்தக் கேள்வியைக் குறித்து வைத்துக் கொள்வதுடன், கலந்துரையாடலின் இறுதியில் அதைக் கேளுங்கள்.
- உங்களிடம் வேறு கேள்விகள் இல்லாவிடின், ஏறத்தாழ எதுவரை அவர்களிடம் இருந்து மறுமொழியைப் பெற்றுக்கொள்வேன் என்று கேட்டுக்கொள்ளலாம்.
- நீங்கள் அந்தத் தொழில் கற்கும் இடத்தை விரும்புவதாகக் கூறுவதுடன், நிறுவனத்தை மேலும் கண்டு பழகிக்கொள்ள, அங்கு அறிமுக வேலை பழக விரும்புவதாகவும் கூறுங்கள்.